**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்**
முன்னிலை : திருமதி.த.மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,
நீதித்துறை நடுவர், குமாரபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் மார்கழி திங்கள் 24 ஆம் நாள்
2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09 ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 75/2022**
**CNR No. TNNM16-001637-2022**

**அரசுக்காக –**
**காவல் ஆய்வாளர்,**
**குமாரபாளையம் காவல் நிலையம்,**
**குற்ற எண். 08/2022,**
**சட்டப்பிரிவுகள் – 279, 304(A) IPC.**

... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

**மோகன்ராஜ், (வயது 42/2022),**
**த/பெ. பழனிசாமி,**
**குலக்காடு தோட்டம்,**
**கோபி, ஈரோடு மாவட்டம்.**

... எதிரி

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C.No. 814/2020/RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி Case Summary கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| Sl.No. | Case Summery | | | | |
| (i) | The Period of remand of the accused | : | Name of the accused | Date of Remand | Relesed on |
| | | 1 | Mohanraj S/o. Palanisamy | 13.01.2022 | 13.01.2022 |
| (ii) | Date of filling of the Complaint/final report in the court | : | Filling of Complaint | Filling of Final Report | |
| | | | 08.01.2022 | 20.07.2022 | |
| (iii) | Date of Committal of the case to the Court of Sessions: | | --- | | |
| (iv) | Date of Questioning of the | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | accused under Section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | | | 07.10.2022 | | |
| (v) | Filling of the miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under Sections 317 of the code. | : | | Crl.M.P. No. | Date of Filling | Result |
| (vi) | Date of Examination in -chief and cross | : | Name of Examination | Name of Examination | Date of Chief | Date of Cross |
| | | | PW.1 | திரு. குமார் | 12.09.2023 | 12.09.2023 |
| | | | PW.2 | திரு. கார்த்தி | 12.09.2023 | 12.09.2023 |
| | | | PW.3 | திருமதி. மணியம்மை | 12.09.2023 | 12.09.2023 |
| | | | PW.4 | திரு. பழனிசாமி | 19.09.2023 | 19.09.2023 |
| | | | PW.5 | திரு. சுப்ரமணி | 19.09.2023 | 19.09.2023 |
| | | | PW.6 | திரு. கருப்பண்ணன் | 21.09.2023 | 21.09.2023 |
| | | | PW.7 | திரு. மாரிமுத்து | 21.09.2023 | 21.09.2023 |
| | | | PW.8 | திரு. மோகனசுந்தரம் | 03.10.2023 | 03.10.2023 |
| | | | PW.9 | திரு. ரவி | 04.01.2024 | 04.01.2024 |
| (vii) | Details of Examination of the accused under section 313 of Code: | | | | 06.01.2023 | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance/production, as the case may be; and | | | | --- | |
| (ix) | Grand of stay by superior courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | | Result |
| 1 வது குற்றச்சாட்டு | | : | எதிரி அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்திய செயலானது இ.த.ச.பிரிவு 279 ன் கீழும், | | | |
| 2 வது குற்றச்சாட்டு | | | எதிரிவாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தி இறப்பை ஏற்படுத்திய செயலானது இ.த.ச.பிரிவு 304(A)ன் கீழும், | | | |

| | | |
|---|---|---|
| எதிரியின் பதில் | : | பொய்வழக்கு |
| நீதிபதியின் தீர்மானம் | : | இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)ன்கீழ் எதிரி குற்றவாளி இல்லை. |
| தண்டனை (அ) உத்தரவு | | முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி இதசபிரிவுகள் 279, 304(A)ன்படிக்கு குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை குவிமுசபிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு கடந்த 20.07.2022 அன்று இந்நீதிமன்றத்தில் சி.சி.75/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுகாறும் விசாரணையில் இருந்து இன்று இறுதி விசாரணையில் அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை எண். 2 திருமதி.A. உதயபானு, B.Com.,B.L., (பொறுப்பு) அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. A.M.M.சண்முகம், M.A.,B.L., அவர்களும், B.S.சரவணன்,M.A.,B.L., அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## தீர்ப்புரை

கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, குமாரபாளையம் காவல் நிலைய சரகம், கோவையிலிருந்து சேலம் செல்லும் தேசியநெடுஞ்சாலையில், வட்டமலை JKK முனிராஜா பள்ளி எதிரில், இவ்வழக்கில் இறந்துபோன அய்யனார் என்பவர் மேற்படி ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து கடந்தபோது, மேற்கே கோவை பக்கமிருந்து கிழக்கே சேலம் நோக்கி வந்த TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து அய்யனார் என்பவரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரியானவர் ஏற்படுத்திய விபத்தில் வாதியின் அப்பா அய்யனார் என்பவருக்கு மண்டை மற்றும் மூளையில் காயங்களை ஏற்படுத்தி அதனால் அவருக்கு மரணம் விளைவித்ததாகவும்கூறி எதிரியின்மீது இதச பிரிவுகள் 279, 304(A)–ன்கீழ் குமாரபாளையம் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருக்கிறார்.

2) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சார்ந்துள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி குற்றம் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>** இவ்வழக்கு காவலர் அறிக்கையின் பேரில் தொடரப்பட்ட வழக்காகும்.

5(1) அ.சா.1 குமாரபாளையத்தில் குடியிருந்து ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறார். விபத்தில் இறந்துபோன அய்யனார் அ.சா.1–ன் தகப்பனார் ஆவார். கடந்த 07.01.2022–ம் தேதியன்று காலை 11.00 மணியிலிருந்து 12.00 மணிக்குள்ளாக வட்டமலை JKK பள்ளி அருகே உள்ள கேட்டிற்கு முன்புறம் கோவை டூ சேலம் தேசிய நெடுஞ்சாலையை மில் கேட்டிலிருந்து அ.சா.1–ன் தகப்பனார் கடந்து செல்லும்போது கோவையிலிருந்து சேலம் நோக்கி வந்த புல்லட் வண்டி அ.சா.1–ன் தகப்பனாரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதுகுறித்து அ.சா.1–ன் தம்பி கார்த்தி அ.சா.1–க்கு தகவல் சொன்னதின்பேரில் அ.சா.1 சம்பவ இடம் வந்து தனது தகப்பனாரை குமாரபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஈரோடு 24 கேர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார். அங்கு அ.சா.1–ன் தகப்பனார் சிகிச்சையிலிருக்கும்போது மயக்க நிலையில் இருந்ததால் போலீசார் விசாரிக்கும்போது அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அ.சா.1 இடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் அ.சா.1 ன்னுடையது ஆகும். அந்த

**புகார் அ.சா.ஆ.1** ஆகும். பின்னர் அ.சா.1—ன் தகப்பனாரை மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார்கள். மூன்று நாட்கள் கழித்து சிகிச்சை பலனளிக்காமல் அ.சா.1—ன் அப்பா இறந்துவிட்டிருக்கிறார். அ.சா.1—ன் தகப்பனாரின்ன் பிரேதத்தின்மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது அ.சா.1—ம் சாட்சியாக உடனிருந்திருக்கிறார். இதுசம்மந்தமாக போலீசார் அ.சா.1—ஐ விசாரித்திருக்கிறார்கள்.

5(2) அ.சா.2 குமாரபாளையத்தில் குடியிருந்து ஷேர் ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறார். விபத்தில் இறந்துபோன அய்யனார் அ.சா.2—ன் தகப்பனார் ஆவார். அ.சா.1 அ.சா.2—ன் சகோதரர் ஆவார். கடந்த 07.01.2022—ம் தேதியன்று காலை 11.00 மணியிலிருந்து 12.00 மணிக்குள்ளாக அ.சா.2 அவரது ஆட்டோவில் சேலம் டூ கோவை தேசிய நெடுஞ்சாலையில் சேலத்திலிருந்து குமாரபாளையம் நோக்கி வந்து கொண்டிருந்திருக்கிறார். அப்போது வட்டமலை JKK பள்ளி அருகே உள்ள கேட்டிற்கு முன்புறம் கோவை டூ சேலம் தேசிய நெடுஞ்சாலையில் மில் கேட் அருகே கூட்டமாக இருந்திருக்கிறது. அ.சா.2 அருகே சென்று பார்த்தபோது அ.சா.2—ன் தகப்பனார் இருசக்கர வாகனத்தில் அடிபட்டு கிடந்திருக்கிறார். அ.சா.2 விபத்து குறித்து விசாரித்தபோது அ.சா.2—ன் தகப்பனார் சாலையை கடந்து செல்லும்போது கோவையிலிருந்து சேலம் நோக்கி வந்த புல்லட் வண்டி அ.சா.2—ன் தகப்பனாரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாக தெரிந்து கொண்டிருக்கிறார். பின்னர் அ.சா.2—ன் தகப்பனாரை குமாரபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஈரோடு கேர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார். பின்னர் அ.சா.2—ன் தகப்பனாரை மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். மூன்று நாட்கள் கழித்து சிகிச்சை பலனளிக்காமல் அ.சா.2—ன் தகப்பனார் இறந்துவிட்டிருக்கிறார். அ.சா.2—ன் தகப்பனாரின் பிரேதத்தின்மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது அ.சா.2—ம் சாட்சியாக உடனிருந்திருக்கிறார். இதுசம்மந்தமாக போலீசார் அ.சா.2 ஐ விசாரித்திருக்கிறார்கள்.

5(3) அ.சா.3 குமாரபாளையம் ஏரித்தெருவில் குடியிருந்து வளையல் கடை நடத்தி வருகிறார். விபத்தில் இறந்துபோன அய்யனார் அ.சா.3–ன் கணவர் ஆவார். அ.சா.1, 2 அ.சா.3–ன் மகன்கள் ஆவார்கள். கடந்த 07.01.2022–ம் தேதியன்று காலை 11.00 மணியிலிருந்து 12.00 மணிக்குள்ளாக அ.சா.3–ன் கணவர் வட்டமலை JKK பள்ளி அருகே உள்ள கேட்டிற்கு முன்புறம் கோவை டூ சேலம் தேசிய நெடுஞ்சாலையை மில் கேட் அருகே கடந்தபோது விபத்தானதாக அ.சா.3–ன் மகன் சொன்னதன்பேரில் அ.சா.3 மருத்துவமனை சென்று பார்த்திருக்கிறார். அங்கு அ.சா.3–ன் கணவர் மயக்க நிலையில் இருந்திருக்கிறார். அ.சா.3–ன் கணவரை மேல் சிகிச்சைக்காக ஈரோடு கேர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார்கள். பின்னர் அ.சா.3–ன் கணவரை மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். மூன்று நாட்கள் கழித்து சிகிச்சை பலனளிக்காமல் அ.சா.3–ன் கணவர் இறந்துவிட்டிருக்கிறார். அ.சா.3–ன் கணவரின் பிரேதத்தின்மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது அ.சா.3–ம் சாட்சியாக உடனிருந்திருக்கிறார். இதுசம்மந்தமாக போலீசார் அ.சா.3–ஐ விசாரித்திருக்கிறார்கள்.

5(4) அ.சா.4 வேமங்காட்டு வலசில் குடியிருந்து நெசவுத் தொழில் செய்து வருகிறார். கடந்த 07.01.2022–ம் தேதி மதியம் 12.00 மணி சுமாருக்கு வட்டமலை அருகே JKKMN கல்லூரி அருகே அ.சா.4 டீ சாப்பிடுவதற்காக கடைக்கு சென்று கொண்டிருந்தபோது, ஒருவர் சேலம் டூ கோவை பைபாஸ் சாலையை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கடந்தபோது, கோவை டூ சேலம் நோக்கி வந்த புல்லட் அய்யனார் என்பவரின்மீது மோதி அவர் கீழே விழுந்து அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. பின்னர் அடிபட்டவரை குறித்து விசாரித்தபோது அவர் பெயர் அய்யனார் என்று சொல்லியிருக்கிறார்கள். அய்யனார் சாலையை கடந்து வெள்ளை கோட்டை தாண்டிவிட்டபோதும், புல்லட் ஓட்டி வந்தவர்தான் அவர்மீது வேகமாக வந்து மோதிவிட்டிருக்கிறார். அய்யனாருக்கு உடல்முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. பின்னர் அவரை மருத்தவமனைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இதுசம்மந்தமாக போலீசார் அ.சா.4–ஐ விசாரித்திருக்கிறார்கள்.

5(5) அ.சா.5 வேமங்காட்டுவலசில் குடியிருந்து நெசவுத்தொழில் செய்து வருகிறார். கடந்த 07.01.2022–ம் தேதி மதியம் 12.00 மணி சுமாருக்கு வட்டமலை எதிர்மேடு JKK பள்ளி அருகே அ.சா.5 டீ சாப்பிடுவதற்காக கடைக்கு சென்று கொண்டிருந்தபோது ஒருவர் சேலம் டூ கோவை பைபாஸ் சாலையை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கடந்தபோது, கோவை டூ சேலம் நோக்கி வந்த புல்லட் அய்யனார் என்பவரின்மீது மோதி அவர் கீழே விழுந்து அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. பின்னர் அடிபட்டவரை குறித்து விசாரித்தபோது அவர் பெயர் அய்யனார் என்று சொல்லியிருக்கிறார்கள். அய்யனார் சாலையை கடந்து வெள்ளை கோட்டை தாண்டிவிட்டபோதும் புல்லட் ஓட்டி வந்தவர்தான் அவர்மீது வேகமாக வந்து மோதிவிட்டிருக்கிறார். அய்யனாருக்கு உடல்முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. புல்லட்டை ஓட்டி வந்தவரின் அடையாளம் அ.சா.5–க்கு 2 வருடங்களானதால் மறந்துவிட்டிருக்கிறது. பின்னர் அவரை மருத்தவமனைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இதுசம்மந்தமாக போலீசார் அ.சா.5–ஐ விசாரித்திருக்கிறார்கள்.

5(6) அ.சா.6 வட்டமலையில் குடியிருந்து கல்யாண் ஸ்டோர் நடத்தி வருகிறார். அ.சா.6 இடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து அ.சா.6 ன்னுடையது ஆகும். கடந்த வருடம் 1–வது மாதத்தில் ஒரு நாள் வட்டமலையிலுள்ள தனது கடைக்கு அருகே விபத்தானதாக அ.சா.6 கேள்விப்பட்டிருக்கிறார். விபத்தான அன்றே மதியம் 3.00 மணி சுமாருக்கு, அ.சா.6–ம், மாரிமுத்து என்பவரும் கடைக்கு வெளியே இருந்தபோது போலீசார் அங்கு வந்து விபத்தான இடத்தை பார்வையிட்டு படம் வரைந்திருக்கிறார்கள். அ.சா.6 இடமும், மாரிமுத்து என்பவரிடமும் விபத்து குறித்து தெரியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் தெரியாது என்று சொல்லியிருக்கிறார்கள். பின்னர் அங்கு வந்து பார்வை மகஜர் தயார் செய்து படம் வரைந்ததற்கு அவர்களை சாட்சியமாக இருக்கச்சொல்லி கேட்டதன்பேரில் அவர்களும் சாட்சியாக இருந்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்திருக்கிறார்கள். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆகும். இதுசம்மந்தமாக

போலீசார் அ.சா.6–ஐ விசாரித்திருக்கிறார்கள்.

5(7) அ.சா.7 குமாரபாளையம் நாராயண நகரில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறார். அ.சா.7 இடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.7 ன்னுடையது ஆகும். அ.சா.6, அ.சா.7–ன் நண்பர் ஆவார். அவர் கல்யாண் ஸ்டோர் நடத்தி வருகிறார். அவரது கடைக்கு முன்னால் கடந்த வருடம் 1–வது மாதத்தில் ஒரு நாள் விபத்தானதாக அ.சா.7 கேள்விப்பட்டிருக்கிறார். விபத்தான அன்றே மதியம் 3.00 மணிக்கு சுமாருக்கு, அ.சா.7–ம், கருப்பண்ணன் என்பவரும் கடைக்கு வெளியே இருந்தபோது போலீசார் வந்து விபத்தான இடத்தை பார்வையிட்டு படம் வரைந்திருக்கிறார்கள். அ.சா.7, 6 இடம் விபத்து குறித்து தெரியுமா என்று போலீசார் கேட்டதற்கு அவர்கள் தெரியாது என்று சொல்லியிருக்கிறார்கள். பின்னர் அங்கு வந்து பார்வை மகஜர் தயார் செய்து படம் வரைந்ததற்கு அவர்களை சாட்சியமாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களும் சாட்சியாக இருந்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்திருக்கிறார்கள். இதுசம்மந்தமாக போலீசார் அ.சா.7–ஐ விசாரித்திருக்கிறார்கள்.

5(8) அ.சா.8 தற்போது பள்ளிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறார். அ.சா.8 கடந்த 07.01.2022–ம் தேதியன்று மதியம் 13.30 மணிக்கு குமாரபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது குமாரபாளையம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆர்டிஏ இண்டிமேசன்பேரில் அங்கு சென்று பார்த்தபோது காயம்பட்ட நபர் ஈரோடு கேர் 24 மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக தகவல் கிடைத்து அங்கு சென்று பார்த்தபோது அவர் மீண்டும் மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றதாக தகவல் கிடைக்கபெற்று அ.சா.8 ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு விபத்தில் காயம்பட்ட அய்யனார் என்பவர் மயக்க நிலையிலிருந்ததால் அவருடன் இருந்த அவரது மகன் குமார் என்பவரை விசாரித்து, நிலையம் வந்து நிலைய குற்ற

எண்.8/2022, இதச பிரிவுகள் 279, 337–ன்படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறார். அ.சா.8 பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கையையும், புகாரின் அசலையும் இணைத்து உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். இதர நகல்களை உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். ஒரு நகலை வழக்கு கோப்பில் வைத்து தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே பகல் 15.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்பண்ணன், மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்திருக்கிறார். அந்த பார்வைமகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றிருக்கிறார். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் புகார்தாரர் குமார், சாட்சிகள் பழனிசாமி, சுப்ரமணி, கருப்பண்ணன், மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார். பின்னர் விபத்தில் காயம்பட்ட அய்யனார் என்பவர் 11.01.2022–ம் தேதியன்று இறந்துவிட்டதாக கிடைத்த தகவல்படிக்கு வழக்கின் சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவிலிருந்து 279, 304(ஏ)–இதசவாக வழக்கின் சட்டப்பிரிவை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்திருக்கிறார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் ஆய்வாளரின் உத்தரவுபடிக்கு இறந்துபோனவரின் இறப்பிற்கான உண்மையமான காரணம் அறியும்பொருட்டு ஆய்வாளர் கொடுத்த பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தை ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவரிடம் கொடுத்து, பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்திருக்கிறார். இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளர் அ.சா.8–ஐ விசாரித்திருக்கிறார்.

5(9) அ.சா.9 தற்போது பரமத்தி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறார். அ.சா.9 குமாரபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்தபோது கடந்த 07.01.2022–ம் தேதியன்று மதியம் 13.30 மணிக்கு குமாரபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக

திரு.மோகனசுந்தரம் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது குமாரபாளையம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆர்டிஏ இண்டிமேசன்பேரில் அங்கு சென்று பார்த்தபோது காயம்பட்ட நபர் ஈரோடு கேர் 24 மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக தகவல் கிடைத்து அங்கு சென்று பார்த்தபோது அவர் மீண்டும் மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றதாக தகவல் கிடைக்கபெற்று அவர் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு விபத்தில் காயம்பட்ட அய்யனார் என்பவர் மயக்க நிலையிலிருந்ததால் அவருடன் இருந்த அவரது மகன் குமார் என்பவரை விசாரித்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.8/2022, இதச பிரிவுகள் 279, 337–ன்படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார். அன்றே பகல் 15.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்பண்ணன், மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்திருக்கிறார். அந்த பார்வைமகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றிருக்கிறார். பின்னர் புகார்தாரர் குமார், சாட்சிகள் பழனிசாமி, சுப்ரமணி, கருப்பண்ணன், மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார். பின்னர் விபத்தில் காயம்பட்ட அய்யனார் என்பவர் 11.01.2022–ம் தேதியன்று இறந்துவிட்டதாக கிடைத்த தகவல்படிக்கு வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 304(ஏ)–இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்திருக்கிறார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். பின்னர் அ.சா.9–ன் உத்தரவின்பேரில் இறந்துபோனவரின் இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும்பொருட்டு அ.சா.9 கொடுத்த பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தை ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவரிடம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்திருக்கிறார். பின்னர் மேல் விசாரணைக்காக அ.சா.9 அவரது பார்வைக்கு வழக்கு கோப்பை பெற்று அன்றே சம்பவ இடம் சென்று பார்த்தபோது காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்தது போலவே மாதிரி வரைபடமும், பார்வை

மகஜரும் இருந்தால் அ.சா.9 தனியாக அவைகளை தயார் செய்திருக்கவில்லை. அவர் விசாரித்த சாட்சிகளை அ.சா.9 விசாரித்தபோது அவரிடம் சொன்னதையே அ.சா.9 இடமும் சொன்னதால் அ.சா.9 தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை. பின்னர் ஈரோடு அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கு முன்பு வைத்திருந்த பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்திருக்கிறார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6** ஆகும். பிரேத விசாரணை சாட்சிகளான கார்த்தி, மணியம்மை, ராஜேந்திரன், அருண்பிரகாஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்திருக்கிறார். பின் எதிரியை தேடி வந்த நிலையில் 13.02.2022–ம் தேதியன்று நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்திருக்கிறார். இவ்வழக்கில் விபத்திற்குள்ளான வாகனமான TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட Royal Enfield என்ற இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சத்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றிருக்கிறார். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் ஸ்ரீதர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றிருக்கிறார். அந்த **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8** ஆகும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பிரேதத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்தியவருமான சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகனசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார். இத்துடன் அ.சா.9 அவரது புலன் விசாரணையை முடித்து எதிரியின்மீது மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். அ.சா.9 விசாரித்தபோது சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் உள்ளபடி அ.சா.9 இடமும் கூறியிருக்கிறார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

6) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு எதிராக உள்ள அம்சங்களை குறித்து குவிமுச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட போது எதிரி அவற்றை பொய் என்றும், பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறி சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தற்போது தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

8) அ.சா.1 புகார்தாரர் மற்றும் கேள்விநிலை சாட்சி ஆவார். அ.சா.2, 3 கேள்விநிலை சாட்சிகள் ஆவார்கள். அ.சா.4, 5 சம்பவ சாட்சிகள் ஆவார்கள். அ.சா.6, 7 பார்வைமகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன்விசாரணை மேற்கோண்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஆவார். அ.சா.9 வழக்கினை புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ஆவார்.

9) இவ்வழக்கில் கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, குமாரபாளையம் காவல் நிலைய சரகம், கோவையிலிருந்து சேலம் செல்லும் தேசியநெடுஞ்சாலையில், வட்டமலை JKK முனிராஜா பள்ளி எதிரில், இவ்வழக்கில் இறந்துபோன அய்யனார் என்பவர் மேற்படி ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து கடந்தபோது, மேற்கே கோவை பக்கமிருந்து கிழக்கே சேலம் நோக்கி TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் ஓட்டிவந்து அய்யனார் என்பவரின்மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்ற சங்கதியை பொறுத்து அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியமளிக்கவில்லை. ஆனால் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ல், வரிசை எண்.5–ல் வாகன ஓட்டி என்கின்ற பகுதியில் எதிரியின் பெயர் மோகன்ராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை தான் ஓட்டி விபத்தை ஏற்படுத்தவில்லை என மறுத்து எதிர்வாதம் எதுவும் புரியவில்லை. மேலே கண்ட பொருண்மைகளின் வாயிலாக கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை எதிரி ஓட்டினார் என்கின்ற சங்கதியை அரசு தரப்பு நிரூபித்துள்ளது.

10) மேலும் கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை எதிரி ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டு அய்யனார் என்பவர் இறந்திருக்கிறார் என்கிற சங்கதியை பொறுத்து அ.சா.1 முதல் 5 வரையிலானவர்களின் சாட்சியத்தின் மூலமாகவும், சான்றாவணங்கள் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சாஆ.8–ன் மூலமாகவும், சம்பவமானது கோவையிலிருந்து சேலம் செல்லும் தேசியநெடுஞ்சாலையில், வட்டமலை JKK முனிராஜா பள்ளி எதிரில் நடைபெற்றது என்கின்ற சங்கதியை சான்றாவணங்கள் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4–ன் வாயிலாகவும் மற்றும் அ.சா.1 முதல் 7 வரையானவர்களின் சாட்சியத்தின் மூலமாகவும் அரசு தரப்பு நிரூபித்துள்ளது.

11) ஏற்கனவே விவாதித்தபடி கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை எதிரி ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டு அய்யனார் என்பவர் இறந்திருக்கிறார் என்கின்ற சங்கதியையும், அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில்தான் விபத்து நடைபெற்றது என்கின்ற சங்கதியையும் அரசு தரப்பு நிரூபித்துள்ள போதிலும், கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை எதிரி அதிகவேகமாகவும், கவனகுறைவாகவும்,

அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினாரா? என்பதை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிற்கே உள்ளது.

12) எதிரியை குற்றச்செயலுடன் தொடர்புபடுத்தி அரசு தரப்பில் அ.சா.4, 5 ஆகியோர் சாட்சிமளித்துள்ளனர். சம்பவ சாட்சியான அ.சா.4 தனது முதல் விசாரணையில்,

> "கடந்த 07.01.2022ம் தேதி மதியம் 12.00 மணி சுமாரக்கு வட்டமலை அருகே JKKMN கல்லூரி அருகே நான் டீ சாப்பிடுவதற்காக கடைக்கு சென்று கொண்டிருந்தபோது ஒருவர் சேலம் டூ கோவை பைபாஸ் சாலையை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கடந்தபோது கோவை டூ சேலம் நோக்கி வந்த புல்லட் அய்யனார் மீது மோதி அவர் கீழே விழுந்து அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது".

என்று சாட்சியமளித்துள்ள போதிலும், அவர் தனது குறுக்கு விசாரணையில்,

> "நான் குடியிருக்கும் இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1/2 கிமீ தூரமிருக்கும். சம்பவம் நடந்த சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் ஆமாம். தேசிய நெடுஞ்சாலையை சம்பவ இடத்தில் கடப்பதற்கு ஜிப்ரா கிராசிங் இல்லையென்றால் ஆமாம். எதிரி அவருக்கான திசையில் தான் வந்தார் என்றால் ஆமாம். இருசக்கர வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்றும் எப்படி வந்தார்கள் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் சாலையை கடப்பவர் தான் இருபுறமும் வாகனங்கள் வருகிறதா என்று பார்த்துவிட்டு கடக்க வேண்டுமென்றால் சரிதான். சாலையை கடந்தவர் வாகனங்கள் வருகிறதா என்று பார்த்துவிட்டு கடந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான்".

என்று சாட்சியமளித்துள்ளார். மற்றோரு சம்பவ சாட்சியான அ.சா.5 தனது முதல் விசாரணையில்,

> "கடந்த 07.01.2022–ம் தேதி மதியம் 12.00 மணி சுமாருக்கு வட்டமலை எதிர்மேடு அருகே JKK பள்ளி அருகே நான் டீ சாப்பிடுவதற்காக கடைக்கு சென்று கொண்டிருந்தபோது ஒருவர் சேலம் டூ கோவை பைபாஸ் சாலையை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கடந்தபோது கோவை டூ சேலம் நோக்கி வந்த புல்லட் அய்யனார் மீது மோதி அவர் கீழே விழுந்து அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது".

என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணையில்,

> "சம்பவம் நடந்த சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் ஆமாம். தேசிய நெடுஞ்சாலையை சம்பவ இடத்தில் கடப்பதற்கு ஜிப்ரா கிராசிங் இல்லையென்றால் ஆமாம். எதிரி அவருக்கான திசையில் தான் வந்தார் என்றால் ஆமாம். பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் சாலையை கடப்பவர் தான் இருபுறமும் வாகனங்கள் வருகிறதா என்று பார்த்துவிட்டு கடக்க வேண்டுமென்றால் சரிதான். சாலையை கடந்தவர் வாகனங்கள் வருகிறதா என்று பார்த்துவிட்டு கடந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான்".

என்று சாட்சியமளித்துள்ளார். சம்பவ சாட்சிகளான அ.சா.4, 5 ஆகியோர்களின் சாட்சியம் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்குமளவிற்கு இல்லை. மேலும் அவர்களது குறுக்கு விசாரணையில் அளித்த பதிலானது அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக இல்லை. எதிரியை குற்றச்செயலுடன் தொடர்புபடுத்தி மற்ற அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியமளிக்கவில்லை. எனவே அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக இல்லாத நிலையிலும், அரசு தரப்பு

சாட்சிகள் யாரும் எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவும்தான் இந்த விபத்திற்கு காரணம் என்றோ சாட்சியமளிக்காத நிலையில் எதிரியின் மீதான அரசு தரப்பு குற்றச்சாட்டு ஏற்கும்படியாகவும், நம்பும்படியாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13) மேலே கண்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்த போது கடந்த 07.01.2022–ம் தேதி பகல் 12.00 மணிக்கு, குமாரபாளையம் காவல் நிலைய சரகம், கோவையிலிருந்து சேலம் செல்லும் தேசியநெடுஞ்சாலையில், வட்டமலை JKK முனிராஜா பள்ளி எதிரில், இவ்வழக்கில் இறந்துபோன அ.சா.1ன் தகப்பனார் அய்யனார் என்பவர் மேற்படி ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து கடந்தபோது, மேற்கே கோவை பக்கமிருந்து கிழக்கே சேலம் நோக்கி TN 56 J 9459 என்ற பதிவெண் கொண்ட ROYAL ENFIELD என்ற வாகனத்தை அதன் ஓட்டுநரான எதிரி அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து அய்யனார் என்பவரின்மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரியானவர் ஏற்படுத்திய விபத்தில் அ.சா.1ன் அப்பா அய்யனார் என்பவருக்கு மண்டை மற்றும் மூளையில் காயங்களை ஏற்படுத்தி அதனால் அவருக்கு மரணம் விளைவித்ததாகவும் கூறியுள்ள சங்கதிகளை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கவில்லை என்பதாலும், அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக இல்லாததாலும், எதிரிமீதான இதசபிரிவுகள் 279, 304(ஏ)–ன்படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது

14) முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி இதசபிரிவுகள் 279, 304(A)–ன்படிக்கு குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை குவிமுசபிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து 2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T MALATHI Digitally signed by T MALATHI Date: 2024.01.09 10:00:48 +05'30'

நீதித்துறை நடுவர்,
குமாரபாளையம்.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு. குமார் | புகார்தாரர் மற்றும் கேள்விநிலை சாட்சி |
| அ.சா.2 | திரு. கார்த்தி | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.3 | திருமதி. மணியம்மை | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.4 | திரு. பழனிசாமி | சம்பவ சாட்சி |
| அ.சா.5 | திரு. சுப்ரமணி | சம்பவ சாட்சி |
| அ.சா.6 | திரு. கருப்பண்ணன் | பார்வைமகஜர் சாட்சி |
| அ.சா.7 | திரு. மாரிமுத்து | பார்வைமகஜர் சாட்சி |
| அ.சா.8 | திரு. மோகனசுந்தரம் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன்விசாரணை செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.9 | திரு. ரவி | வழக்கினை புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.01.2022 | புகார் |
| அ.சா.ஆ.2 | 08.01.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 08.01.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 08.01.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 11.01.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 11.01.2022 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 13.01.2022 | மோட்டார் வாகன அறிக்கை (TN 56 J 9459 ROYAL ENFIELD ) |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8 | 11.01.2022 | பிண ஆராய்வு சான்று |

**அரசு தரப்பு சான்று பொருள்கள்** :– இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள்**:– இல்லை

T MALATHI Digitally signed by T MALATHI Date: 2024.01.09 19:09:13 +0530

நீதித்துறை நடுவர்,
குமாரபாளையம்.

**குறிப்பு:–**

1. இவ்வழக்கின் தீர்ப்பு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. இவ்வழக்கு விசாரணையின் போது சாட்சி 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.
4. கு.வி.மு.ச 363(5) ஆவது பிரிவின்படி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 ( பொறுப்பு)அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.